உ

கடவுள் துணை.

தென்னிந்தியா றெயில்வேஎன்னும்
கர்னாடகப் புகைவண்டியின் சிந்து.

)(*)(



சென்னை


வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1925.

72

மலசுத்தி லேகியம்.



இந்த லேகியத்தை ஐந்துவயது குழந்தைகள்முதல் விருத்தாப்பியர் வரையில் பெண்கள் புருஷர்கள் யாவரும் தின்னலாம். தின்பதற்குத்தகுந்த இனிப்பாயிருக்கும். இதன் பிரயோசனம் யாதெனில், கை கால் குடைச்சல், கெர்ப்பவாய்வு, சூலவாய்வு, அபானவாய்வு, குன்மவாய்வு, யெப்போதும் வயிற்றில் கோளாறாகவேயிருந்தால் மலச்சிக்கல், மலம்வரட்சி வயிற்றிலுள்ள எல்லாவியாதிகளையும் நிவர்த்தி செய்யும். மலச்சிக்கலில்லாமல் அன்றாடம் மலத்தை அன்றாடம் கழிக்கும் இந்தலேகியத்தை சாப்பிடுகிற அளவு முதலிய விபரத்தை மருந்து டப்பியுடன் அனுப்பும் பத்தியநோட்டீசில் பார்த்துக்கொள்ளலாம்.

1-சேர் லேகியம் விலை ரூபா—1.

[illegible] தெரிய கேட்கவேண்டுமானால் அரையணு ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பீ. நா. லோகநாதமுதலியார் அண்டு கோ,

'நாராயணவிலாஸ்'

பீரம்பூர் பாரெக்ஸ், போஸ்டு, மதராஸ்,

உ

கடவுள் துணை.

தென்னிந்தியா றெயில்வே என்னும் கர்ஞடகப் புகைவண்டியின் சிந்து.

தென்னிந்திரா றெயில்பாரடி-பெண்மேணயிது
தெற்கேபோகும்சோடி

மன்னர்கள் தான் துதிக்கும் மதிராஸ்கருகாக
உன்னிதமாகவே புகமையாயேர்ப்பட்ட (தெ)

மண்டலத்தோர்புகழும் மதிருஸ்எழும்பூரினில்
கண்டவர்வியப்படையக் கருதிவியமித்த (தெ.)

சட்டமுடன்ஸ்டேஷன் பட்டணத்தோர்போற்ற
திட்டமதாகவே கட்டியிருக்கிற (தெ)

கண்ணாடிகதவுகள் கனத்தஆபீசுகள்
விண்ணுடரும்மெச்ச விதமாகயேறப்பட்ட (தெ)

கைகாட்டிமரங்களும் கனத்தஆளுகளும்
பைகாண்சிகனர்முதல் பலருமிருக்கிற (தெ)

இஞ்சின்வண்டிமுதல் இணையில்லாவண்டிகள்
அஞ்சுதலில்லாமல் தங்கியிருக்கிற (தெ)

டிக்கட்டுகள்வாங்கி இக்கட்டில்லாமலே
பக்குவமாகவே தக்கபடிபோவோம் (தெ)

சைதாப்பேட்டை ஸ்டேஷன் சார்ந்தபரங்கிமலே
பயிலாகிறெயில்வண்டி பார்மீதிலேபோகும் (தெ)

பல்லாவரம்பாரு பக்கத்தில்வண்டலூரு
எல்லார்தங்குங்கூடு வாஞ்சேரியிதுபாரு (தெ)

அங்கமதுயிட்டேற ஆண்டவனைப்போற்றும்
சிங்கபெருமாள்கோயில் ஸ்டேஷனிதுபாரு (தெ)

தங்கவிளப்பாரி தாகவிடாய்தீர
செங்கற்பட்டுஸ்டேஷன் சிறப்பதாய்நாம்வந்தோம்

கோர்ட்டுமுதலான தூக்குமரங்களும்
மேட்டிமையாய்ச்செயில் நாட்டியாய்த்தோற்றுது

பொன்விளைந்தகளத்தூரு புகலரியமதுராந்தம்
தன்மையுள்ளதாசில்தார் நடத்துங்கச்சேரி (தெ)

அச்சரபாக்கமிது அடர்ந்துவரும்றெயில்வண்டி
இச்சையுடன்மாற்றும் இணையில்லாஸ்டேஷனிது()

ஒலக்கூறுதாண்டிநாம் ஒயிலானதிண்டிவனம்
கலக்கமிலாத்தாலூர்கா கட்டமுகிவந்தோம்பார் ()

புதுமையுள்ளசத்திரத்தில் போஜனம்நாம்செய்து
இதமுடன்றெயிலேறி இக்ஷணம்போகலாம் (தெ)

மானிலந்தான்புகழும் மயிலமெனுந்தலத்தில்
கானமயில்மீதேறும் கர்த்தனிருக்கிறார் (தெ)

கண்டுபணிந்தால் காமவினைகள்போகும்
வண்டுநிகர்விழியாளே மாங்குயில்மொழியாளே ()

விக்கிரவாண்டி விழுப்புரந்தாண்டி
பக்கத்திலேபண்ருட்டி பண்புள்ளஸ்டேஷனிது ()

நெல்லிக்குப்பமெனும் நேரானவூரிது
அல்லலகற்றுந் திருப்பாதிரிப்புலியூரிது (தெ)

பேடைமயிற்கண்ணாளே பிரியாதேசெந்தேனே
கூடலூர்ஸ்டேஷனைக் குறிப்பாகநீபாரு (தெ)

ஆலப்பாக்கமிது அடுத்தபரங்கிப்பேட்டை
கோலமுள்ளகாயலார் குடிகளிருக்கிறார் (தெ)

பார்தனிலுள்ளோர்கள் பத்தியாய்த்தான்துதிக்கும்
சீருள்ளசிதம்பரத் தெரிசனஞ்செய்யடீ (தெ)

நடராஜர்வீற்றிருக்கும் நலமானசிற்சபையை
மடமயிலேநீயும் மனதினிற்போற்றடி (தெ)

தொல்லைவினைகளைத் துரத்திகருவருக்கும்
தில்லைமாகாளியின் தெரிசனஞ்செய்யடி (தெ)

கனிவர்க்கங்களுண்டு காசாலட்டுமுண்டு
இனிமைப்பிரசாதங்க ளிருக்குமிடமுமுண்டு ( )

வல்வினையைத்தீர்க்கும் வயித்தீஸ்வரன்கோயில்
எல்லையைவிட்டுமகா வேகமாய்த்தான்போகும் ( )

மாயவரங்குத்தாலம் வயங்குநரசிங்கபேட்டை
ஞாயஸ்டேஷன்கள் தாண்டிதுரிதமாகப்போகும் ( )

திருவிடைமருதூர் தேன்பொழியுங்கும்பகோணம்
பருவுஞ்செந்தலைப்பேரு வந்தோமிப்போதடி (தெ)

பாவவிநாசகம் பகரும்ஐயம்பேட்டை
சோபமவைநீங்குஞ் சொகுசுள்ளதஞ்சாவூர் (தெ)

முப்பத்திரண்டும் முதன்மையாய்ச்செய்வித்த
தப்பில்லாபோஜராஜன் தங்கியதஞ்சாவூர் (தெ)

சாலியமங்கலம் சார்ந்தஅம்மாம்பேட்டை
நீடாமங்கலமிது சேர்ந்தகொரடாச்சேரி (தெ)

குளிக்கரைஸ்டேஷனிது குணமுள்ள திருவாரூர்
களிக்கவே தியாகரைக் கண்டுதெரிசிப்போம் (தெ)

இத்தலந்தன்னிலே யிணையில்லாதேருகள்
மெத்தவுசித்தமாக மேன்மையாய்த்தோற்றுது ()

அப்புறமிருக்கும் அடைவாசஸ்டேஷன்களை
தப்பிதமில்லாமல் தன்மையுடன்சொல்வேன் (தெ)

கீவளூர்தானிது கிளர்ச்சிக்கில்தானிது
மேவிநாகப்பட்டணம் மேன்மையுடன்வந்தோம் ()

திடமுள்ள திருச்சினாப் பள்ளிஸ்டேஷனிது
வடமேற்குறெயில்பாதை வந்துகலக்கும்பாரு (தெ)

பிட்டுக்குமண்சுமந்து பிரம்பாலடிப்பட்ட
இட்டமுள்ளசொக்கநாதர் திருமதுரைதலமிது ()

அங்கயற்கண்மீனாட்சி யம்மனிருக்கிற
சங்கைகளில்லாத சன்னிதியிற்கோறு (தெ)

திருப்பரங்குன்றம் திருமாநகரம்
விருப்பமுள்ளகள்ளுகுடி விருதுபட்டிஸ்டேஷன் ()

துலுக்கபட்டிசாத்தூர் கோவில்பட்டிகுமாரபுரம்
தொடர்ந்துவருஸ்டேஷன் துருசாய்போகும்இஞ்சின்

கண்டவர்வியப்படையுங் கடப்பூருஸ்டேஷனிது
அண்டையிலிருக்குமணி யாச்சிசத்திரமிது (தெ)

செந்நைதருண்டாதாண்டி. சிறப்பானறெயில்வண்டி
விந்தைமிகுந்திருநெல் வேலியிலேதாவந்தோம் ()

எத்தூர்திட்டப்பாறை நேத்தியாய்நாம்வந்து
தூத்துக்குடி துலை தூரமேநாம்வந்தோம் (தெ)

தேசமென்றுப்புகழ் திருவண்ணைமலையில்வாழ்
பாசமுடைவீர பத்திரனியம்பிய (தெ)

தென்னிந்தியா றெயில்வே சிந்து

முற்றிற்று.
